கலாதீபம்

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.10.2024 | தீபம் 28


# இன்று அக்டோபர் முதலாம் நாள்

# தனது 101 ஆவது அகவையில்

# கால்பதிக்கிறது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

01.10.1923 இல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரியர் கலாசாலை - இலங்கையில் இயங்கு நிலையில் உள்ள மூத்த ஆசிரியர் கலாசாலை என்ற பெருமையுடன் இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காண்கின்றது. இது தொடர்பான சிறப்பு வைபவமும் இன்று காலை கலாசாலையில் நடைபெறுகின்றது. கடந்த ஆண்டில் ஆசிரியர் கல்வியை மையப்படுத்திய ஆய்வரங்கம் இடம்பெற்றிருந்தது. இதில் ஓர் அரங்கு சேர் பொன் இராமநாதன் பெயரில் அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு சிறப்பு நிகழ்வாக சேர் பொன் இராமநாதன் நினைவுப் பேருரை நடைபெறுகின்றது.

கோப்பாயில் ஆசிரியர் கலாசாலை அமைவதற்கான அடித்தளம் இட்ட பெருமை காரைநகர் அருணாசலம் உபாத்தியாயரைச் சாரும். கோப்பாய் பிரதேசத்தில் 1916 இல் அவர் அமைத்த ஆசிரியர் கலாசாலையைத் தொடரமுடியாத சூழ்நிலை அவரது இறப்பினால் ஏற்பட்டது. அதன் விளைவாக கோப்பாயைச் சேர்ந்த சைவத்தமிழ்ப் பெரியார்கள் சேர் பொன் இராமநாதனிடம் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் அவர் தனது ஐந்து ஏக்கர் நிலப்பரப்பை கலாசாலை அமைவதற்காக வழங்கினார். அந்தக் காணி இன்றும் இராமநாதன் கலட்டி என்ற பெயராலேயே அழைக்கப்படுகின்றது.

பல்வேறு ஏறுமுகங்களையும் இறங்கு முகங்களையும் கண்ட இக்கலாசாலை கடந்த ஆண்டு பிரம்மாண்டமாக நூற்றாண்டு விழாவைக் கொண்டாடியது. நூற்றுக்கணக்கான மாணவர்கள் இக்காலப்பகுதியில் கலாசாலையில் மாணவர்களாக விளங்கியமையாலும் பழைய மாணவர்கள் மற்றும் நூற்றாண்டுவிழாச் சபையினரின் ஆதரவினாலும் ஓராண்டு முழுவதும் விழா முன்னெடுக்கப்பட்டது. தற்போது 32 ஆசிரிய மாணவர்கள் மாத்திரம் கற்கும் சூழல் காணப்படுகின்றது.

கலாசாலைக்கு உள்வாங்கப்படும் ஆசிரிய மாணவர்கள் மூன்று வகுதிகளில் இருந்து உள்வாங்கப்படுகின்றனர்.

01. பல்கலைக்கழகங்கள் அல்லது உயர் தொழினுட்பக் கல்லூரிகளில் டிப்ளோமா பட்டம் பெற்று இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 – 1 (இ) வகுதியில் உள்வாங்கப்படுகின்றவர்கள் தமது தொழில் சார் வாண்மைத்துவ விருத்திக் காகக் கலாசாலையில் கற்கை நெறிக்காக அனுமதிக்கப்படுகின்றனர்.


தொடர்ச்சி 05 ஆம் பக்கத்தில்


**01.09.2024 — 30.09.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101வது ஆண்டு கலாசாலைதினம் 01.10.2024

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 01.10.1923 இல் நிறுவப்பட்டு நூற்றி ஒரு ஆண்டுகள் நிறைவடை-யும் நிலையில் அதனை கௌரவப்படுத்தும் வகையில் அமைந்த கலாசாலை தின விழா 01.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கலாசாலை ரதிலக்க்ஷ்மி மண்டபத்தில் இடம்பெறும்.
கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவரும், யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய திருமதி. ஜமுனா ராஜசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.
கலாசாலை நிறுவுவதற்கு நிலத்தை வழங்கிய சேர் பொன் இராமநாதனை கௌரவப்படுத்தும் வகையில் இராமநாதன் நினைவுப் பேருரை இடம்பெறவுள்ளது.
**ஆசிரிய கல்வியியலாளர்களின் தத்துவ ஆராய்ச்சிப் பட்டங்கள் தொடர்பில் மேற்கிளம்பும் சவால்களும் அவற்றை தாண்டிப் பயணித்தலும்** என்ற பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் திரு.இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரை ஆற்றுவார்.

## அரசினர் ஆசிரிய கலாசாலைகளுக்கான இறுதிப்பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடும் பணிகள் இலங்கை பரீட்சைத்திணைக்களத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசினர் ஆசிரிய கலாசாலைகளுக்கு கடந்த மாதம் 26.08.2024 தொடக்கம் 01.09.2024 வரை நடைபெற்ற 2021/2022(2024) அணி ஆசிரிய மாணவர்களுக்குரிய விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியானது 24.09.2024 அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை மற்றும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையிலும் தமிழ்மொழி மூலமான மதிப்பீட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கலாதீபம்
කලාදීපම
KALADEEPAM
கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

### ஆசிரியத்தில் வாண்மைத்துவம்

ஆசிரியர் தொழில் ஒரு புனிதமான சேவை என்றும் அறிவு மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் மேற் கொள்ளப்படுகின்ற உயரிய சேவை யாகவும் கருதப் படுகின்றது. ஹீமாயூன் கபீர் என்பவர் குறிப்பிடுகிறார் திறமையான ஆசிரியர்கள் இல்லாவிடில் ஒரு நல்ல கல்வி முறையா னது தோற்றுப்போகும். திறமையான ஆசிரியர்கள் இருந்தால் சாதாரண கல்வி கூட பெரிய அளவில் பேசப்படும் என்றார்.

அந்தவகையில் ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன என்பதை இவ்வாறு வரைவிலக்கணப்படுத்த முடியும். **மாணவர்களுக்கான கல்விசார் அடைவு மட்டங்களை அதாவது பெறுபேறுகளை வெற்றிகரமான வகையில் உருவாக்கத் தேவைப்படுகின்ற திறன்கள், தேர்ச்சிகள் என்பவற்றை மேம்படுத்திக் கொள்ளும் செயன்முறையே** ஆசிரியர் வாண்மை விருத்தி எனப் படும்.

மாணவர்களை அறிவு, திறன், ஒழுக்கம், வாழ்க்கை என்பவற்றில் உயர்வடையச் செய்வதற்காக கற்பிப்பதற் கான திறன்கள், தேர்ச்சிகள், கற்பிக்கும் தரம் என்பவற் றினை மேம்படுத்திக் கொள்கின்ற செயன்முறையே ஆசிரியர் வாண்மை விருத்தி எனப்படுகிறது.

ஒரு ஆசிரியர் சிறந்த கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமாயின் அறிவு மட்டும் கொடுத் தால் போதாது அதனையும் தாண்டிய செயற்பாடுகள் மனப்பாங்கு. அர்ப்பணிப்பு, ஊக்கம், தேடல், தத்துவம் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்படவேண்டும். ஆசிரியர்கள் பூரணமாக இருந்தால் மட்டுமே அவரால் பயிற்று விக்கப்படும் மாணவர்களும் பூரண ஆற்றல் உடைய வராக உருவாக முடியும்.

இவ்வாறு ஒரு ஆசிரியரை பூரணமானவராக கட்டமைப் பதற்கு ஆசிரியர் வாண்மை விருத்தி என்பது இன்றிய மையாததாகும். இதனைத் தற்போது பல நிறுவனங்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு மு.பரம்சோதி அவர்களுக்கு நூற்றாண்டுவிழா மலர் கையளிப்பு

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் (21.05.1998 - 02.01.2003) திரு மு.பரம்சோதி அவர் கள் அண்மைக் காலம் வரை கொழும்பில் வாழ்ந்து தற்போது தனது சொந்த ஊராகிய காரைநகர் தங்கோடைக்கு வருகை தந்து அங்கு தங்கியுள்ளார்.

19.09.2024 அன்று அவரது வீட்டில் நேரடியாக சந்தித்த கலாசாலை அதிபர் திரு ச.லலீசன் அவர்கள் கலாசாலையின் நூற்றாண்டு விழா மலரை அவரிடம் நேரடியாக கையளித்தார்.

தனது 77ஆவது வயதிலும் உடல் சற்றுத் தளர்ந்திருந்தாலும் புத்தகஙகளுடன் அவர் தனது பொழுதை பயனுள்ள வழியில் செலவு செய்கிறார். கலாசாலை அதிபருடன் தனது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.



# News in Brief - Month of September

**11.09.2024**
**Wednesday Assembly Events to mark Bharatiyar Memorial Day**

It was chaired by Deputy Principal K. SenthilKumaran. Mrs K.Vijitha, second year Primary teacher student hosted these events.

Mrs. Udayalatha Navadeesan, Lecturer of Manipay Teacher Development Institute, gave a special speech on the subject of multidimensionality of Bharatiyar.

Vel Nandakumar Lecturer of the College delivered the introductory speech of the guest.

Special Education Teacher student Sfana delivered student speech on the topic of Bharatiyar poetry.

Ms. Udayalatha Navadeesan who was the special guest was honored by the college community.

**19.09.2024**
**Centenary Souvenir Handed over**

Former Principal of Kopay Teachers' College Mr.M. Paramsoothy lived in Colombo, recently visited his hometown Karainagar Thangodai and stayed there. Our college Principal visited to Karainagar, met our Former Principal and handed over the Kopay Teachers' College centenary souvenir.

**Holiday for academic activities of the college**

The Director of Teacher Education of the Ministry of Education has announced that 18.09.2024, Wednesday, 19.09.2024, Thursday, 20.09.2024, and Friday, three days have been given as a holiday for college Teacher students due to the Presidential Election.

**06.10.2024**
**A special feature was the Retirement of non-Acadmic staff Mr Aiyathurai Ravichandran**

A welcome procession with auspicious music by Vasanthamohan Rajit group. The events were hosted by Non Acadmic staff Gananathan Sajeev.

The event was followed by lighting of the auspicious lamp by the Principal and salutation to God. This was done by the development officer Mrs Mekila Umasuthan. Then the Principal delivered the keynote address. The following event Kaladeepam September issue has been released. In which Mr. I.Ravichandran Congratulatory messages were there. Subsequently a biographical documentary on Ravichandran was screened by Teacher Students.

# 101 ஆவது அகவையில் கால்பதிக்கும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

முதலாம் பக்கத் தொடர்ச்சி.....

02 உயர்தரப் பரீட்சை சித்தியெய்தியோரிடையே நடத்தப்படும் போட்டிப்பரீட்சை அடிப்படையில் ஆசிரியர் சேவை வகுப்பு 3 – 11 இற்கு உள்வாங்கப்படுகின்றவர்கள்

03. பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாக கற்பித்த அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களாக அல்லது ஆசிரியர் சேவை வகுப்பு 3 11 இற்கு உள்வாங்கப்படுகின்றவர்கள்

கலாசாலையில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்வோர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தாலும் தேசிய கல்வி நிறுவகத்தாலும் நடத்தப் படுகின்ற பரீட்சையில் சித்தி பெற்று ஆசிரி யர் சேவை 3 11 ஆ வகுதிக்குள் உயர்த்தப்படுகின் றனர்.

தேசிய கல்வி நிறுவகம் உயர்தரத்தில் சித்தி யடைந்து ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்ட வர்களுக்கு நிகழ்நிலையில் பகுதியளவிலும் நேர-டியாக மிகுதியளவிலும் நான்குவருட கல்விமாணிப் பட்டநெறி நிகழ்ச்சித் திட்டத்தை அண்மைக்காலங் களாக நடத்துகின்ற நிலையில் - அதனை வீட்டில் இருந்தவாறு இலகுவில் தொடரக் கூடிய வாய்ப் பு இருக்கின்றமையாலும் பட்டக்கல்வியாக அமைந் துள்ள காரணத்தாலும் ஆசிரியர் கலாசாலை களுக்கு வருகை தராமல் நேரடியாக பட்டக் கல்வியை தொடரும் போக்கு அதிகரித்து வருகின் றது.

இதைவிட ஆசிரியர் கலாசாலையில் கற்றவர்களும் கல்விமாணிக் கற்கையை மேற்கொள்வதாயின் வரட விலக்களிக்கப்படாமல் - தொடக்கத்தில் இருந்து நான்கு வருடங்கள் கல்விமாணிக் கற்கை நெறியை தொடர வேண்டிய நிலை காணப்படுகின்மை யால் மேற்காட்டிய முறைமைகளில் ஆசிரிய நியமனத் தைப் பெற்றுக் கொண்டவர்கள் ஆசிரியர் கலாசா லைகளை நாடுவதைவிட



**சரஸ்வதி முத்துக்குமாரசுவாமி**
**பழைய மாணவி (1966/1967)**
**இளைப்பாறிய ஆசிரியர்**

நேரடியாக கல்விமாணிப் பட்டக் கற்கையைத் தொடர விரும்புகின்றனர்.

தற்போதைய சூழலில் ஆசிரிய கலாசாலைகள் ஆசிரியர் கல்வி சார்ந்த வேறு தளங்களில் பய ணிக்க வேண்டிய நிறுவனங்களாக அமைந் துள்ளன. ஆசிரியர்களுக்கான பல்கலைக் கழகம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில் - சேவையின் பின்னான பயிற்சியை வழங்கும் நிறுவனங்களாக அவை உருமாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

இத்தகைய சூழமைவில் வடபுல மண்ணிற்கு சிறப்பாகவும் நாடு முழுவதற்கும் பொதுவாகவும் ஆசிரியரர் கல்வியை வழங்கி இன்று 101 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை நாமும் வாழ்த்துவோம்.



# சிறப்பாக இடம்பெற்ற ஐயாத்துரை ரவிச்சந்திரனின் மணிவிழா ~ 06.09.2024

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கற்பித்தல் சாரா உத்தியோகத்தர் ஐயாத்துரை ரவிச்சந்திரனின் மணிவிழா 06.09.2024 கலாசாலையின் ரதிலக்ஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. கலாசாலையின் கற்பித்தல் சாரா அலுவலர்கள் இணைந்து இவ்விழாவை ஏற்பாடு செய்திருந்தனர்.

கலாசாலையின் யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து வசந்தமோகன் ரஜித் குழுவினரின் மங்கள இசையுடன் வரவேற்பு ஊர்வலம் இடம்பெற்றது. தொடர்ந்து மேடை நிகழ்வுகள் இடம்பெற்றன இதனை கற்பித்தல் சாரா அலுவலர் கணநாதன் சஜிவ் தொகுத்து வழங்கினார். அதிபரின் மங்கள விளக்கேற்றல், கடவுள் வணக்கம் என்பவற்றை தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது. இதனை அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மேகிலா உமாசுதன் ஆற்றினார். தொடர்ந்து அதிபர் தலைமை உரை ஆற்றினார்.

அவர் தனது தலைமை உரையில் திரு ரவிச்சந்திரனின் நேரம் தவறா பண்பையும் அலுவலகத்தில் நம்பிக்கைக்கு உட்பட்டவராக செயற்பட்ட திறத்தினையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து வாழத்துரைகள் இடம்பெற்றன. இதனை கலாசாலையின் பிரதிஅதிபர்களான க.செந்தில்குமரன், த.கோபாலக்கிருஷ்ணன், உபஅதிபர் சத்தியா.ரஞ்ஜிற், முன்னாள் அதிபர்களான வே.கா.கணபதிப்பிள்ளை, வீ.கருணலிங்கம், தலைமை முகாமைத்துவ உத்தியோகத்தர் நிசந்தி பிரதீபன், விரிவுரையாளர் சி.மனோகரன், விரிவுரையாளர் சந்திரிக்கா தர்மரட்ணம், ஆசிரிய மாணவி அஸ்மிலா பேகம் ஆகியோர் வழங்கினர். கவிஞர். விரிவுரையாளர் வேல் நந்தகுமார் கவி வாழ்த்தை மேற்கொண்டார்.

தொடர்ந்து கலாதீபம் செப்டெம்பர் மாதத்திற்கான இதழ் வெளியீடு செய்யப்பட்டது. இதில் ஐ.ரவிச்சந்திரன் பற்றிய வாழ்த்துச் செய்திகள் சிறப்பாக இடம்பெறறுள்ளன. இதன் வெளியீட்டுரையை கலாதீபம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தர்ஷினி முத்துராஜா மேற்கொண்டார். தொடர்ந்து கலாதீபம் குழுமத்தினர் ஐ.ரவிச்சந்திரனிடம் சஞ்சிகையின் வன் பிரதியை கையளித்தனர்.

தொடர்ந்து ரவிச்சந்திரன் பற்றிய வாழ்க்கை வரலாற்று ஆவணப்படம் ஆசிரிய மாணவர்களால் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டது. தொடர்ந்து கௌரவிப்புக்கள் இடம்பெற்றன.

கற்பித்தல் சாரா உத்தியோகத்தரது கௌரவிப்பு, விரிவுரையாளரது கௌரவிப்பு, முன்னாள் விரிவுரையாளரது கௌரவிப்பு, முன்னாள் கற்பித்தல் சாரா அலுவலர்களது கௌரவிப்பு, எனப்பலரும் கௌரவிப்புக்களை மேற்கொண்டனர். நிறைவாக விழா நாயகர் ஐ.ரவிச்சந்திரன் ஏற்புரை வழங்கினார். நிகழ்வில் கலாசாலை சமூகத்தினர் மற்றும் ஐ.ரவிச்சந்திரனின் உறவினர் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.
















## 11.09.2024 புதன் ஒன்றுகூடல்
# பாரதியார் நினைவுநாள் நிகழ்வுகள்
## மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக விரிவுரையாளர் திருமதி உதயலதா நவதீசன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம் பெறும் புதன் வாராந்த ஒன்றுகூடலின் சிறப்பு நிகழ்வாக பாரதியார் நினைவுநாள் நிகழ்வுகள் 11.09.2024 அன்று பிரதி அதிபர் க.செந்தில் குமரன் தலைமையில் இடம்பெற்றது.

இரண்டாம்வருட ஆரம்பக் கல்விநெறி ஆசிரிய மாணவி க.விஜிதா இந்நிகழ்வுகளை தொகுத்து வழங்கினார்.

இந்திகழ்வில் மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவக விரிவுரையாளர் திருமதி உதயலதா நவதீசன், பாரதியாரின் பல் பரிமா ணம் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார்.
கலாசாலையின் விரிவுரையாளர் வேல் நந்த குமார் அதிதி அறிமுகவுரையினை ஆற்றினார்.

விசேடகல்விநெறி ஆசிரிய மாணவி சப்னா பாரதி யார் கவிதைகள் என்ற பொருளில் ஆசிரிய மாணவர் உரையை ஆற்றினார்.
கலாசாலை பிரதிஅதிபர் க.செந்தில்குமரன் நிறை வுரையாற்றினார்.
சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட திருமதி உதயலதா நவதீசன் கலாசாலை சமூகத்தின ரால் கௌரவிக்கப்பட்டார்.








# ஆளுமைச் சிறப்பிதழ்

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடன பாட விரிவுரையாளராக கடமையாற்றி, கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS) உள்வாங்கப்பட்டு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி அதிபராக விளங்கி ஓய்வுபெற்ற கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்கள் இம்மாத கலாதீபத்தின் ஆளுமைச் சிறப்பிதழின் முதலாவது அதிதியாக அலங்கரிக்கின்றார்.**

கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடனத்துறையின் இரண்டாவது அணியில் பயிற்சி பெற்று பின்னர் இங்கு விரிவுரையாளராகப் பணிபுரிந்து 1997 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர் பொன் இராம நாதன் அவைக்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தினுடைய வருகைதரு விரிவுரையா ளராக இன்றும் பணியாற்றி வருகிறார்.

இவரது தந்தையார் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட கலா பவனம் நாட்டிய நிறுவனத்தை தொடர்ந்தும் பேணி நடாத்தி வரும் இவரின் கலைச் சேவையைப் பாராட்டி 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதான கலாகீர்த்தி விருதையும் பெற்றுள்ளார். அத்துடன் **பரமகுரு சமர்ப்பணம்** என்ற பொருளில் அவரது நூ றாவது ஆண்டு விழாவினை இரு நிகழ் வுகளாக நிகழ்த்திய பெருமைக்குரியவராகவும் திகழ் கின்றார். அவரது கலைப்பயணம் குறித்து இளைய தலை முறையினர் அறிந்துகொள்ளும் வகையில் எமது நேர்காணலின்போது அவர் வழங்கிய பதில்கள் பின்வருமாறு

**நீங்கள் ஒரு மூத்த நடனக்கலைஞர் என்ற வகையில் உங்களுடைய கலைப்பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா?**

காலம் சென்ற கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் மூத்த புதல்வியாவேன். கலை




கலாதீபம்
කලාදීබම්
KALADEEPAM
ஸ்தாபிதம் 2020 01.10.2024 தீபம் 28

பாரம்பரியத்தில் தந்தையார் அண்ணாவியார் அவர் இரண்டாவது பரம்பரை, நான் மூன்றாவது பரம்பரை. தந்தையாரின் வழிநடத்தலில் அவரிடம் முதல் நாட்டியம் பயின்று பின்னர் இந்தியா சென்று மேல-திக பயிற்சியை பத்மஸ்ரீ அடையார் கே.லஷ்மணன் அவர்களிடம் பரதநாட்டியமும் கதகளியினை குருஜீ கோபிநாத் மற்றும் விஸ்வகலாகேந்திராவிலும் பயின்று திரும்பினேன்.

எனக்கு ஆசிரிய நியமனம் கிடைக்கும் முன்னர் உடுவில் மகளிர் கல்லூரி யிலும், பின்னர் இராமநாதன் கல்லூரியிலும் பயிற்று வித்தேன். அதன் பின்னர் ஆசிரிய நியமனம் இராம நாதன் கல்லூரியிலே கிடைக்கப்பெற்றது. ஆசிரிய நியமனம் பெற்று இரு ஆண்டுகள் கடமை ஆற்றிய பின் ஆசிரிய பயிற்சி பெறவேண்டிய தேவை காணப் பட்டது. அந்நாளில் ஆசிரிய பயிற்சி செய்ய வேண் டியது கட்டாயத் தேவை. அதன்படி இரண்டாவது அணியில் பரதநாட்டிய கற்கைநெறியினை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்றேன். அப்போதைய அதிபர் ஆனந்தகுமாரசுவாமி அம்மை யார் அவர்களின் வேண்டுதலின்படி




கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பரத நாட்டிய கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் அணியில் நாங்கள்தான் பயிற்சி பெற்றோம். அங்கே இரு ஆண்டுகள் மிக அழகாக எங்களுக்கு பாடங்கள் நடைபெற்றன. காலம் சென்ற மகா வித்துவான் வீரமணிஐயாவும், செல்வி சங்கரப் பிள்ளை அவர்களும் எமக்கு துறைசார்ந்த விரிவு ரையாளராக கடமையாற்றினார்கள்.

அதேபோல் க.ப.சின்னராஜா சேர் அவர்களிடம் ஜதிப்பயிற்சியிலும் ஈடுபட்டு, ஈராண்டுகள் அங்கு நடைபெற்ற எல்லா வைபவங்களிலும் பங்குபற்றி அதிலும் மிக உன்னதமான இராகம், தானம், பல்லவி போன்ற நடன நிகழ்ச்சிகள், நாட்டிய நா-டகங்கள், திருக்குற்றாலக்குறவஞ்சி, நல்லைக் குறவஞ்சி போன்ற நீண்ட நாட்டிய நாடகங்களை நாங்களே நெறியாள்கை செய்து எங்களுக் குள்ளேயே நட்டுவாங்கம் மேற்கொண் டோம். அன்றைய காலத்தில் 8 நடன ஆசிரியர்கள் பங்கேற்று இந்த நெறியை பூர்த்தி செய்து பின் மீண்டும் நியமனம் இராமநாதன் கல்லூரியிலே கிடைத்தது. அன்றிலிருந்து 16 ஆண்டுகள் இராமநாதன் கல்லூரியில் எனது சேவையைத் தொடர்ந்தேன். அந்த காலப்பகுதியில் அங்கு நடன-பாட கற்பித்தல் செயற்பாடில் ஈடுபட்ட பின்னர் பிரம்மஸ்ரீ வீரமணிஐயா அவர்களின் ஓய்வுக்குப்பின் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக நியமனம் கிடைக்கப்பெற்றது. அது 1991 என நினைக்கிறேன்.

அவரது ஓய்வுநிலை பாராட்டுவிழா அன்று நான் கடமையை ஏற்றேன் என்று சொல்வதில் பெருமைப்படுகின்றேன். அப்போதைய அதிபர் திரு வை.கா.சிவப்பிரகாசம் அவர்களின் வேண்டு கோ-ளின் அடிப்படையில் கல்விப்பணிப்பாளர் சுந்தர லிங்கம்ஐயா அவர்களின் பணிப்பில் எனக்கு இந்நியமனம் கிடைக்கப்பெற்றது.

**ஆடல் ஆசான் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் நூற்றாண்டு விழா - பரமகுரு சமர்ப்பணம் 07.09.2024 அன்று சிறப்பாக அனுடடிக்கப்பட்டது. அவரது கலைப்பணி பற்றி தங்கள் மனப்பதிவினைக் குறிப்பிடுங்கள்**

ஆடல் ஆசான் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் 100 ஆவது ஆண்டு நிகழ்வு 2022 ஆம் ஆண்டில் கொண்டாடி இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களாக எனது சகோதரி கனடாவில் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் பிறந்த தினத்திற்கு இரண்டு நாட்கள் அண்மிக்க காலம்சென்று விட்டார். அதனால் கொண்டாட முடியவில்லை. தொடர்ந்து அவருடைய ஓராண்டுப் பூர்த்தி நினைவுதினம் வரும்வரை நாங்கள் கொண்டாட முடியாத சூழ்நிலை. பின்னர் எனது வெளிநாட்டு பயணங்கள், அரங்கேற்றம், வெளிநாட்டுப் பரீட்சைகளுக்கு செல்ல வேண்டிய நிலை என்பன தவிர்க்க முடியாது இருந்தது.



# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



இறை ஆசியும் எல்லோருடைய விருப்பும் கூடிய-தால் இந்நிகழ்வினை இரண்டு நிகழ்வுகளாக எமது வீட்டிற்கு அண்மையில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் 19.08.2024 திகதியும் பின்னர் 07.09.2024 அன்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூ ரியிலும் இரண்டு நிகழ்வுகளாக நிகழ்த்தப்பட்டது.









அவருடைய வாழ்க்கை வரலாறு, கலைச்சேவை என்பன இலங்கையில் மிகவும் உன்னதமானது. அதனால் பாடசாலைக் கலைத்திட்டத்திலும் சரி, வட இலங்கை சங்கீத சபையிலும் சரி, ஐரோப்பிய மாநிலத்திலும் சரி, வெளிநாட்டிலும் கலைத் திட்டத்தில் அவர் ஆற்றிய கலைச்சேவையையும் அவரைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றினையும் மிகவும் பிரதான அம்சமாக பாடத்திட்டத்தில் புகுத்தியுள்ளனர். அத்துடன் M.A மேற்படிப்புக்கு பட்டதாரிகளாக பதிவு செய்பவர் கூட ஆய்வுக் கட்டுரைக்காக எனது தந்தையாரின் கலை ப்பணியையும் அவர் ஆற்றிய சேவையையும் என்னிடமே கேட்டுத்தெளிவார்கள்.

**கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் தங்கள் பணி தொடங்கிய காலப்பகுதியினையும் அப்போதைய ஆசிரியர் கல்வி சூழல் பற்றிய உங்களது அனுபவப் பகிர்வினைக் குறிப்பிடுக?**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையா ளராக சேர்ந்தபோது உள்வாங்கப்பட்ட நெறிகளான ஆரம்பக்கல்வி, சமயம், அழகியல், தமிழ், ஏனைய பாடத்துறைகளிலும் அந்தந்த துறைசார் கல்விச் செயற்பாட்டில் விழாக்கள் எடுப்பது வழக்கம். அழகியல் என்னும் போது பரதநாட்டியம், சங்கீதம், சித்திரம் என்று மூன்று பாடநெறிகள் அப்போதி ருந்தன. நான் பரதநாட்டியத்தில் கடமை யாற்றினேன். என்னுடன் சிலகாலம் வேலானந்தன் ஐயா அவர்கள் கடமையாற்றினார். அந்த வகையில் பரதநாட்டிய பாடத்திட்டத்தில் வரலாறு, தத்துவம், கற்பித்தல் முறைகள் என்ற வகையில் கற்பித்தேன். எங்களுக்கு உறுதுணையாக ஜதி வகுப்புகளுக்கு செல்வராஜா சேர் அவர்கள் ஒத்து ழைப்பு வழங்கினார்கள்.

கலாசாலையில் நடைபெறும் எல்லாக் கலை விழாக்களும் அதாவது ஆரம்பக்கல்வி எனின் அதனுடன் சம்மந்தமான நிகழ்ச்சியை தயாரித்து வழங்குவேன். காரணம் எல்லாவற்றிற்கும் பரத நாட்டியம்தான் அடிப்படை அதற்கூடாக அவர்களின் ஆரம்பக் கல்வி செயற்பாடுகள் அதாவது சிறுவருக்குரிய விளையாட்டு மூலம் கல்வியை கற்பித்தல் அவர்களுடைய கல்வியை முன்னெடுத்தல் அதில் பாரதியார் பாடல் எனின் ஓடிவிளையாடு பாப்பா போன்ற சில பாடல்களுக்கு ஆசிரிய மாணவிகளுக்கூடாக நாட்டிய

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



வடிவமைப்பு செய்து மேடை ஏற்றினேன். அது எல்லோரிடமும் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதேபோல உபபாடம் தெரிவுப்பாடம் எடுக்கின்ற மாணவ மாணவிகளுக்கு கூட அவர்களுக்குரிய செயற்பாடில் உதாரணமாக முத்தமிழ் விழா எனில் பிரதான பரதநாட்டிய பாடமாக தெரிபவர்கள் நாட்டிய நாடகம் போன்ற துறைசார்ந்த நடன நிகழ்வுகள், சாஸ்திரியம் சம்மந்தமான நிகழ்வுகள் அதே போல உபபாடம் எடுப்போர் காவடி, கும்மி, கோலாட்டம் போன்ற நிகழ்வுகள் மேலும் தேயிலைக் கொழுந்து, வேப்பிலை, தாள நடனம், செம்பு நடனம், சுளகு நடனம், போன்ற கிராமிய நடனம் அதாவது ஆரம்பக் கல்வியில் தெரிவுப் பாடமாக எடுப்போர் நடன ஆசிரியர் இல்லாத இடங்களிலும் நடனப்பாடத்தை கற்பிக்கக் கூடியதாக அதாவது ஒரு கலை நிகழ்ச்சிக்கு மாணவரை தயார்படுத்தக் கூடியதாக செயற்படுத்தியிருந்தோம். துறைசார்ந்த அதாவது கீர்த்தனங்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக இருந்த திரு க.ப.சின்னராசா ஆசிரியர், மகா வித்வான் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர், கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களுடைய பாடல்கள் அதேபோல கல்வயல் குமாரசாமிஐயா அவர்களுடைய எழுத்துருவாக்கத்தில் நாட்டிய நாடகம் அதற்கு இசை அமைத்தவர் கரவெட்டி குமாரசுவாமி ஆசிரியர் அவர்கள், அதேபோல வேறு நாட்டிய நாடகம் தமிழிலும் செய்திருக்கின்றோம். “இன்னார் செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்” இது திருக்குறளை ஒட்டிய நாட்டிய நாடகம். அதுவும் நாங்கள் வெளியிடங்களில் கூட செய்திருக்கின்றோம் நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. அது இணுவிலைச் சேர்ந்த வைகுந்தம் கணேசபிள்ளை அவர்களின் எழுத்துருவாக்கத்தில் செய்யப்பட்டது. அதுவும் பெரும் வரவேற்பைப் பெற்றது. பிரதான பாடத்திற்கு குறைவான மாணவர்கள் இருந்தாலும் வேறு துறை சார்ந்த ஆர்வமுள்ள மாணவர்கள் என்னுடன் பங்கு பற்றி நாட்டிய நாடகத்தை சிறப்புற செய்தார்கள். அவர்கள் தற்பொழுதும் என்னை ஏதேனும் அரங்குகளில் கண்டால் அம்மா என்னை ஞாபகம் இருக்கிறதா இதெல்லாம் செய்திருக்கிறோம், உங்களிடம் படித்தோம் என்றெல்லாம் சொல்லுவார்கள். அதே போல ஆரம்பத்தில் விமோசனம் எனும் நாட்டிய நாடகம் வீரமணி ஐயாவின் எழுத்துருவாக்கத்தில் உருவாக்கப்பட்டது. அதில் எல்லா ஆசிரிய மாணவர்கள் நாட்டியதுறை சார்ந்தவர்கள் அல்ல எல்லாத்துறை சார்ந்த மாணவர்களும் பங்கு பற்றினார்கள்.

கலாசாலையில் இடம்பெறும் கல்வியலாளர்கள் வருகை, கல்விப்பணிப்பாளர் வருகை, செயலாளர்கள் செயற்பாடுகளின்போது



# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



புஸ்பாஞ்சலி, வரவேற்புநடனம், ஓய்வு பெற்றுச் செல்லும் விரிவுரையாளருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு போன்றவற்றில் கூட நாங்கள் நிறைய பங்கு பற்றியுள்ளோம். இஸ்லாமிய மாணவர்கள் கூட பங்கு பற்றியுள்ளனர். இந்த நிகழ்வுகளுக்கு ஆசிரிய மாணவர்களை துறைசார்ந்த பயிற்சி நெறியை பின்பற்றுகிறவர்களுக்கு நானே நட்டுவாங்கம் செய்து மேடை ஏற்றுவது வழக்கம் ஏனெனில் அவர்களுக்கு கொஞ்சம் நுட்பமான விடயங்களை கொடுக்க உதவும்.

அதேபோல தெரிவுப்பாடங்களை எடுத்து சின்னச்சின்ன கிராமிய நடனங்கள், ஆக்க நடனங்கள் போன்றவற்றை பிரதான துறையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கு நட்டுவாங்கம் பயிற்றுவித்து செயல்ப்படுத்தியிருக்கின்றோம். நட்டுவாங்கத்தை ஒரு பாடநெறியாக, கற்பித்தல் முறையில் பாடவேளையில் அவர்களுக்கு அடிப் படை பயிற்சியை வழங்கியிருக்கின்றேன். இதற்கு எனக்கு காலம் சென்ற கலாபூசணம் க.ப.சின்னராஜா சேர் அவர்களுடைய உதவி கிடைத்தது. மாணவர்களுக்கு ஜதிகள் எழுதும் முறையைக் கூட வழிப்படுத்தினார். அந்த வகையில் பாடசாலைக் கலைத்திட்டத்தில் அடவுகளைச் சீர்படுத்தி தாளக் குறியீட்டுடன் பாடத்திட்டத்தில் வரப் பண்ணிய முறைகளில் அவரும் ஒருவர். அவரிடம் பயின்ற மாணவி ஒருவர்தான் அந்தக் குழுவில் இடம் பெற்று சீர்திருத்தம் செய்து வழிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் பெருமையுடன் கூறுகின்றேன். இதற்குக் காரணம் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கொடுத்த வளம்.



**தங்கள் காலப்பகுதியில் கலாசாலையில் நடைபெற்ற அரங்க நிகழ்வுகளில் ஆசிரிய மாணவரை தயார்படுத்தலில் கையாண்ட உத்திகள் பற்றிக் கூறுங்கள்**

உத்திகள் எனும் போது ஆரம்பக்கல்வி, சமயநெறி வேறு துறையைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்களாயின் இலகுவான வடிவமைப்புக்களைப் பயன்படுத்தி அவர்களுக்கு வரக்கூடிய சின்னச் சின்ன அடவுகளைப் பயன்படுத்தி ஒயில் ஆட்டம், வேப்பிலை நடனம், தேயிலைக் கொழுந்து பறித்தல் போன்ற ஆடல்களை மலையக மாண வர்கள் என்னிடம் பயின்றனர். அவர்களுக்கு வழிகாட்டி, மாணவர்களை உருவாக்கி மேடை ஏற்றி இருக்கின்றோம். என்னுடைய பிரதான பாடத் தை எடுக்கும் மாணவர்களுக்கு கொஞ்சம் கனதியான அவர்களின் துறைக்கு ஏற்ற மாதிரி அவர்களுக்கு வரக்கூடிய முறையில் பயிற்றுவித் திருக்கின்றேன். நடனக் குழு வகுப்புக்கள் மூலம் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் மாணவர்கள் பயிற்றப்பட்டவர்களாகவும், பயிற்சி பெறாதவர்களாகவும் இருப்பார்கள். சிலர் எவ்வித பயிற்சியும் அற்றவர்களாக இருப்பார்கள். ஆரம்பப் பயிற்சிகள் கூட சிலவேளைகளில் அவர்களுக்குக் கிடைத்திருக்காது. அவர்கள் தொலைக்கல்வி பாடசாலையில் தொண்டர் ஆசிரியர்களாக சேவைகளில் உள்ளோர் உள்வாங்கப்பட்டு இருப்பர். எனவே ஆசிரிய மாணவர்களை உள்வாங்கி ஈடுபடுத்தி பயிற்சிகளைக் கொடுத்திருக்கின்றோம். ஆரம்பத்தில் ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்கப்பட்டோர் அநேகம் இந்தியாவில் படித்தவர்கள், மட்டக்களப்பு விபுலானந்தாவில் படித்தவர்கள் கூட பயிற்சிக்காக வந்திருந்தார்கள் ஆசிரியர் பயிற்சி தேவை என்பதற்காக எனவே சிறந்த கலைநிகழ்ச்சிகள் கொஞ்சம் கனதியான கலைநிகழ்ச்சிகள்

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



செய்திருக்கின்றோம் சிறப்பாக கலை நிகழ்ச்சிகளில் மாணவர்களும் எங்களுடன் நிறைய பங்கு பற்றி அவர்கள் தங்களுடைய செயற்பாட்டை எமக்கு வழங்கி இருக்கிறார்கள். அத்துடன் விளையாட்டுப் போட்டியில் இடைவேளையின் போதான நிகழ்ச்சி களாக சில செயற்பாடுகள் நாட்டியத்தில் இலகுவான அசைவு கொண்டு ஆசிரிய மாணவர் களே எங்களிடம் விடயங்களைப் பெற்று தமது இல்லங்களுக்கு தாமே செய்வார்கள்.

இதுவொரு பெருமை மிக்க விடயமாகக் கரு-துகிறேன். சைவ நிகழ்வுகளாக இருந்தாலும் காரைக்கால் அம்மையார் போன்றோருடைய பாடல் களுக்கு திருமதி கலா.பொன்னம்பலம் அவர்கள் சந்தங்களை அவரே தந்து உதவும் போது அதனைக் கொண்டு விழாக்களின் போது நான் நாட்டியம் கற்றுக் கொடுத்து இருக்கின்றேன். பண் சுமந்த ஆடல், தேவாரங்களுக்குக் கொடு த்து இருக்கின்றோம். அப்போது பருத்தித்துறை ஆச்சி ரமத்திலே இருந்த சுவாமிஜி கூட அழகாக நன்றாக இருக்கிறதென்று அன்பளிப்புக் கூட செய்தி ருக்கிறார்கள். நான் இராமநாதன் கல்லூரி போல் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் நிறைய தயாரி ப்புக்களை வழங்கி இருக்கின்றேன் அது எனக்கு சிறந்த வழங்களையும், ஆளுமைகளையும் பெற்றுத் தந்தது.



**தற்கால நடன பாட கற்றல் கற்பித்தல் முறையி யலில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்தால் சிறப்பானதாக இருக்கும் என்பது பற்றிய உங்கள் ஆலோசனைகள்?**

நான் நினைக்கின்றேன் ஆசிரியர்கள் ஆடுவார்கள் மாணவர்களுக்கு எப்படி இலகுவாக கற்பிக்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் காலத்திற்குக் காலம் அறிந்துகொள்ள வேண்டும். பரதநாட்டியம் கற்றல் - கற்பித்தல் முறையியல் தொடர்பான செயலமர்வுகள் போதாது என நினைக்கின்றேன். தரம் வாய்ந்த நல்ல கலைஞர்களால் அவர்களுக்கு சேவைக்கால பயிற்சிகளை காலத்திற்குக் காலம் வழங்குவது நல்லது என நினைக்கின்றேன்.

எமது காலங்களில் குருமார்களின் கற்பித்தலா லேயே நாம் தரமான மாணவர்களை உரு வாக்கி இருக்கின்றோம். எமது மாணவர்களும் சிலர் நன்றாக உருவாக்குகிறார்கள். எவ்வாறு அவர்கள் உள்வாங்கினார்களோ அவ்வாறு தான் கற்பிக் கிறார்கள்.

பிரதானமானது லயம், பாவம், இராகம் மற்றது அபிநயம் போதிப்பது எப்படி, புதிய ஆக்கம் செய்தல், எப்படி ஆக்கம் அமைத்தல், சில பாடல்களுக்கு அபிநயம் அமைக்கும் போது ஸ்தானம் எங்கே பிடிப்பது, தவறான கருத்துச் சேதம் வராதவாறு எவ்வாறு அபிநயம் அமைப்பது.

அநேகமாக நாங்கள் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இருக்கும் போது மூத்த விரிவுரை யாளர்களின் ஆலோசனை கேட்டு என்னுடைய நாட்டியங்களை வடிவமைத்தேன். பிரத்தியேக நடனமாக இருந்தாலும் சரி ஆசிரிய பயிற்சிக் கலா சாலையாக இருந்தாலும் சரி ஆடல்களின் தமிழ் கருத்துக்கள், சமய கருத் துக்கள் உள்வாங்கி அதற்குரிய அபிநயங்களை வடிவமைக்கின்றேன். அங்கு இருக்கும் போது பின்புலம் அமைந்தது,

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



அந்த வழிகாட்டல்களில் கூட தாங்கள் நன்றாக ஆடுவார்கள் ஆனால் மாணவர்களுக்கு கையளிப்பது எப்படி என்று தெரியுமோ தெரியாது இது தற்பொழுதும் கேள்விக் குறியாக இருக்கிறது.

**அழகியல் செயற்பாடுகள் மனிதனைப் பூரணப்படுத்துகின்றது, அழகியல் செயற்பாடுகள் ஏனைய பாட ஆசிரிய மாணவர் கற்றலிலும் ஒரு அங்கமாக இடம் பெற வேண்டும் என்பது பற்றிய தங்கள் கருத்து?**

நல்ல விடயம், அழகியல் என்பது பாடி,ஆடி கற்பிப்பது, பெரிய பெரிய கல்வி சிந்தனை யாளர்கள் அதைத்தான் விரும்பி இருக்கிறார்கள். வகுப்பறையில் ஒரு மணித்தியாலம் என்றால் ஒரு மணித்தியாலமும் விரிவுரைமுறை கொடுத்தால் அது பிள்ளையைச் சென்று அடையாது. எனக்கு அயல் வகுப்பில் திருநாவுக்கரசு ஐயா பாடியே கல்வியியல், உளவியல் பாடம் எடுப்பார். தமிழ்ப் பாடம் கற்பிக்கும்போது கூட பழைய பாடல்களை உதாரணம் ஆக கூறுவார். அவர் கற்பிக்கும் விடயங்கள் மாணவர்களுக்கு இலகுவில் சென்றடையும் அதுபோல குழுமுறைச் செயற் பாடுகளில் ஆடிக்கற்பித்தால் அவர்களுக்கு ஞானம் கிடைக்கும் என்று நினைக்கின்றேன் மற்றது ஒரே எழுத்து வேலையாக இருந்தாலும் நகைச் சுவையான விடயங்களைக் கூறும் போது சில விடயம் மனதில் நிற்கும் என நினைக்கின்றேன். எனக்கு கற்பித்த விரிவுரையாளர்களும் அவ்வாறே செய்தனர். அப்படி பாடி ஆடி கற்பித்தால் சிறந்த வெளிப்பாடு கிடைக்கும் என நினைக்கின்றேன்.



**தற்காலத்தில் செய்முறைக் கற்றல் - கற்பித்தலுக் காக ஆசிரியரை வளப்படுத்தல், ஆசிரியர் கல்வியில் மிகவும் தாக்கமான செல்வாக்கு செலுத்திக் கொண்டிருக்கின்றது.**

**நீங்கள் ஆசிரியரை தற்போதும் பயிற்றுவிக் கின்றீர்கள், ஆசிரியராக வரப்போவோரையும் கற் பித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்ற வகையில் தங்கள் அனுபவத்தை எம்மோடு பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

நல்ல ஒரு விடயம், உலகளாவிய ரீதியில் எங்கும் இல்லாத வரப்பிரசாதம் இலங்கையின் தரம் 6 இலிருந்து உயர்கல்வி வரை கலைத்திட்டத்தில் செய்முறை ஒரு பாடமாக புகுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக அழகியல் பாடம் ஆரம்பக் கல்வியில் இருந்து கற்றுக் கொடுக்கின்றனர்.

மூன்றையும் படிக்க சொல்லி, அதில் மாணவர் தமது விருப்பினைத் தெரிவு செய்ய வைக் கிறார்கள். அந்தவகையில் இலங்கையில் நாட்டியம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. பரதம் புகழ் பெற்ற இந்தியாவில் கூட பாடத்திட்டமாக இல்லை. உயர் கல்வியில்தான் பரத நாட்டியம் காணப்படுகிறது. அங்கு பல பிரச்சினை, பல நடனபாணிகள் இருக் கின்றது.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் பாரம்பரிய பாணிகளை தான் கைக் கொள்கிறோம். தஞ்சாவூர் பாணியில் இருந்து பந்தணையூர்பாணி அதன்பிறகு ருக்மணிதேவி அம்மா தனக்குள் உள்வாங்கி கொண்டு அதற்குள் உள்வாங்கப்பட்ட பாரம்பரிய பாணியைத்தான் நாங்கள் கைக்கொள்கிறோம். அந்த நடன முறையை கற்பிக்கும் போது ஆசிரியர்கள் நல்ல நடன குருமார்களிடம் பயின்று இருக்கிறார்கள், நாங்களும் இந்தியா சென்று படித்து வந்திருக்கின்றோம்.

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



நல்ல அழகாக கொடுக்கிறார்கள், கொடுத்ததை வாங்குகிறார்கள், ஆனால் வாங்கிய பொருளை திரும்ப மாணவர்களுக்கு கொடுக்கிற முறை எப்படி என்பது ஒரு சிலருக்கு விளங்கவில்லையோ தெரியாது. காரணம் அந்த நட்டுவாங்கத்தின் பெறுமதி, அறிமுறை என்பது மாணவர்கள் ஏனைய பாடங்களைப் போல மனப்பாடம் செய்து அதை பரீட்சைக்கு எழுதுவது போல நடனத்தையும் எழுதுகிறார்கள் இதனால் அறிமுக ரீதியில் அதிக புள்ளி பெறுகிறார்கள், செயன்முறை ரீதியில் வர வர புள்ளி குறைந்து வருகிறது, காரணம் பிள்ளைகளுக்கு பாடசாலை பங்குபற்றல், தரமான நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் வழங்காமை, அது தெரியும் இது தெரியும்தானே என்று எல்லோரையும் குறை சொல்லும் மட்டத்தில் இருந்தால் கலை வளராது என நான் நினைக்கின்றேன், மாணவர்களின் தரம், தனியாள் வேறுபாடு, மாணவர்களுக்கு ஏற்றால் போல கற்பிக்க வேண்டும், ஒரே முறையில், விரிவுரை முறையிலோ, செயன்முறை முறையிலோ ஒரே மாதிரி கற்பிக்க முடியாது, ஒருபிள்ளைக்கு ஒருவித அடவில் சுத்தம் இருக்காது, சில லய சுத்தம் இருக்காது, சில அங்க சுத்தம் இருக்காது அவர்களை நிற்பாட்டி ஒரு அளவு திருத்தி செய்விக்க வேண்டும், பிரத்தியேக கல்வியில் ஏனைய பாடங்களைப் பயில்வது போல பயில்வது ஓரளவு திருப்தி தருவதாக அமைகிறது.



பாடசாலையை நம்பி இருப்போருக்கு ஏனோதானோ என்று, ஆனால் என்னைப் பொறுத்தவரையில் எனது கல்விச் சேவைக்காலத்தில் நான் பிரத்தியேக நிறுவனங்களுக்கு செல்லாத மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு புக வைத்துள்ளேன் என்பதில் பெருமைப்படுகின்றேன்.

ஏனெனில் பிரத்தியேக நிறுவனம் செல்லாமலே அறிமுறைப் பரீட்சை முடிந்த கையோடே பாடசாலை வரும்படி கூறி செயன்முறைப் பயிற்சியை தொடங்கி விடுவோம். அப்படி தொடங்கும் போது தரமான மாணவர்களை உருவாக்கலாம். நல்ல நாட்டிய நாடகம், கிராமிய நடனம், பாடசாலைகளில் பங்குபற்ற வைத்தால் மாணவர்களுக்கு செய்முறைசார் பயிற்சிகள் சிறப்பாக வரும் என்று. சில பிள்ளைகளுக்கு தாள ஞானம் வருவதற்கு அதுக்குரிய அடிப்படை பயிற்சிகளைக் கொடுத்தால் நல்லம் போல இருக்கிறது, எல்லோரும் நல்ல வளமான ஆசிரியர்கள், M.A, PhD வரை சென்றிருக்கிறார்கள் ஆனால் எப்படி மாணவர் களுக்கு கற்பிக்க வேண்டும், பகிர்ந்து கொடுக்க வேண்டும், ஒரு 3 இடியப்பம் சாப்பிடும் பிள்ளையை 5 இடியப்பம் சாப்பிடு என்றால் சாப்பிடாது, அதே போல நாங்கள் ஒரு விடயத்தை விடயதானம் கொடுக்கும் போது பிள்ளைகளுக்கு அளவாக பகிர்ந்து பிரித்துக் கொடுத்தால் அது பிள்ளையைச் சென்றடையும் என நினைக்கின்றேன்.

அந்த கற்றல் முறை எனது தந்தையாரிடமும் எனது குருமாரிடமும் இருந்து நான் கற்றுக் கொண்டேன். மாணவருக்கு ஏற்ப அதாவது குருலட்சணம் மாணவலட்சணம் இருக்கிறது, மாணவரின் தன்மைக்கு ஏற்ப பகிர்ந்து கொள்வது, அது போலத்தான் கலையும் அமையும் என நினைக்கிறேன். தொழில் வாய்ப்புக் கிடைக்கும் போது பல்கலைக் கழகம் கிடைத்தும் தொழில்வாய்ப்பு கிடைக் காட்டால் மனச்சோர்வு கிடைக்கும், வேறு துறையை நாட வேண்டி இருக்கும் நிறையச் சிக்கல்,

# கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்
# ஆளுமைச் சிறப்பிதழ்



முன்னைய காலங்களில் ஆத்மாத்தமாக படிக்க விரும்பினார்கள் கலைநிகழ்ச்சியில் பங்கு பற்றினால் போதும் என நினைத்தவர்கள் இப்பொழுது வேலைவாய்ப்பு, பொருளாதார சிக்கல் போன்றவற்றை எதிர்நோக்கி வருகிறார்கள். நாங்கள் நல்லபடி சொல்லிக் கொடுத்தால் பிள்ளை நல்ல பெறுபேற்றை அடைந்தால் அதுவே நமக்கு பெரிய ஒரு கொடை என்றபடியால் பிள்ளைகளுக்கு சிறப்பாக கற்றுக்கொடுக்க வேண்டும், வேலை வாய்ப்பு, உலகளாவிய வாழ்வியல் எதிர்நோக்குகள் நிறைய இருப்பதால் கலையை கலையாக சிந்திக்க நேரமும் இருக்காது, எனைய பாடங்களை போல பிரத்தியேக கல்வி நிறுவனங்களுக்கு ஓடித்திரி வதால் ஒரு பாடத்தில் முழுமையாக மனதை ஈடுபடுத்த முடியாமை தற்போது காணப்படுகிறது. காரணம் கொவிட் - 19 க்கு பிறகு இந்த தாக்கம் என நினைக்கிறேன். மேலும் ஒரு கலைநிகழ்ச்சியை பார்வையிடக் கூட மாணவர்கள் செல்வது குறைவு அந்த வகையில் நிறைய பின்னடைவைத்தான் சந்திக்கிறோம் என நினைக்கிறேன்.

**கோப்பாய் ஆசிரியர் காலாசாலையின் மாதாந்த வெளியீடான கலாதீபம் மின் இதழுக்கான நேர்காணலை தங்கள் வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் தந்துதவியமைக்கு கலாசாலை சமூ கத்தினர் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**கலையின்பமே நிலையின்பமாம்**









**ஆளுமைச் சிறப்பிதழ்**

ஆலோசனையும் வழிகாட்டலும் ~ சந்திரமௌலீசன் லலீசன் (அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

நேர்காணலும் ஒருங்கிணைப்பும் ~ தர்ஷினி முத்துராஜா (விரிவுரையாளர்)

நேர்காணல் வடிவமைப்பு ~ வேலும்மயிலும் சேந்தன் (விரிவுரையாளர்)

ஒலி வடிவிலிருந்து எழுத்துரு ~ திருக்குமாரன் பெலினி (ஆசிரியமாணவி, விஞ்ஞானநெறி (2023/2024)

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.10.2024 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது